இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இத்திருச்சடங்கின் போது, திருத்தந்தை பொதுக் காலத்திற்குரிய புனித ஆண்டுக்கான நன்றி செலுத்தும் இறைவேண்டலை வாசித்தார். அதிகாரப்பூர்வ வாய்ப்பாட்டில் (official formula) "இந்தப் புனிதக் கதவு மூடப்பட்டுள்ளது, ஆனால் உமது இரக்கத்தின் கதவு மூடப்படவில்லை" என்ற வார்த்தைகள் உள்ளன.

# புனித பேதுரு பெருங்கோவிலில் புனிதக் கதவு மூடப்பட்டது



**கடந்த 2024-ஆம் ஆண்டு, டிசம்பர் 24-ஆம் தேதியன்று தொடங்கிய யூபிலி ஆண்டின் அதிகாரப்பூர்வ முடிவைக் குறிக்கும் வகையில், ஜனவரி 06, செவ்வாய்க்கிழமையன்று, புனித பேதுரு பெருங்கோவிலின் புனிதக் கதவை மூடினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.**

இந்த வழிபாட்டுச் சடங்கு ஜனவரி 06, செவ்வாய்க்கிழமை ஆண்டவருடைய திருக்காட்சிப் பெருவிழாவன்று, காலை 9:30 மணிக்கு இடம்பெற்று, உரோமை நகர் முழுவதும் யூபிலி கொண்டாட்டங்களை முடிவுக்குக் கொண்டு வந்தது.

உரோமை நகரிலுள்ள புனித இலாத்தரன், புனித மேரி மேஜர், புனித பவுல் ஆகிய மூன்று பெருங்கோவில்களின் புனிதக் கதவுகள் ஏற்கனவே மூடப்பட்ட நிலையில், கடைசியாக புனித பேதுரு பெருங்கோவிலின் புனிதக் கதவு நேற்று மூடப்பட்டது.

1975-ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ஒரு நடைமுறையைப் பின்பற்றி, பின்னர் 2000-மாம் ஆண்டு மாபெரும் யூபிலி விழாவின் போது திருத்தந்தை புனித இரண்டாம் ஜான் பால் அவர்களால் எளிமைப்படுத்தப்பட்டது. அதாவது, முந்தைய விழாக்களில் இருந்த பொதுச் சுவர் எழுப்புதல் அலங்காரம் இல்லாமல், வெண்கலக் கதவு பலகைகளை அடையாளமாக மூடும் வரம்பு நிலைக்கு மாற்றப்பட்டது.

இத்திருச்சடங்கின் போது, திருத்தந்தை பொதுக் காலத்திற்குரிய புனித ஆண்டுக்கான நன்றி செலுத்தும் இறைவேண்டலை வாசித்தார். அதிகாரப்பூர்வ வாய்ப்பாட்டில் (official formula) "இந்தப் புனிதக் கதவு மூடப்பட்டுள்ளது, ஆனால் உமது இரக்கத்தின் கதவு மூடப்படவில்லை" என்ற வார்த்தைகள் உள்ளன.

பின்னர், இறையருளின் கருவூலங்கள் திறந்தே இருக்க வேண்டும் என்றும், இதனால் விசுவாசிகள் தங்கள் மண்ணகத்துக்குரிய திருப்பயணத்தின் முடிவில், "உமது விண்ணகக் கதவை நம்பிக்கையுடன் தட்டி, நிலைவாழ்வுக்குரிய மரத்தின் கனிகளை சுவைத்து மகிழட்டும்" என்றும் வேண்டிக்கொண்டார் திருத்தந்தை.

"தாவீதின் திறவுகோலே" (O clavis David) என்ற பல்லவி (முன்மொழி) பாடப்பட்டபோது, திருத்தந்தை புனிதக் கதவை நெருங்கி, அதன் நுழைவாயிலில் நுழைந்து, மண்டியிட்டு, இரண்டு பெரிய வெண்கலக் பலகைகளையும் (bronze leaves) மூடினார். இந்த அடையாளம் யூபிலி காலத்தின் முடிவைக் குறிக்கிறது, அதேவேளையில், கடவுளின் இரக்கத்தின் கதவுகள் எப்போதும் திறந்திருக்கும் என்பதை மீண்டும் உறுதிப்படுத்துகிறது.

புனிதக் கதவு மூடப்பட்ட உடனேயே, புனித பேதுரு பெருங்கோவிலில் ஆண்டவருடைய திருக்காட்சிப் பெருவிழாவிற்கான திருப்பலிக்குத் தலைமை தாங்கினார் திருத்தந்தை.

புனிதக் கதவை முத்திரையிடும் திருச்சடங்கு ஏறத்தாழ பத்து நாட்களுக்குப் பிறகு தனிப்பட்ட முறையில் நடைபெறும். சுவர் எழுப்பும் திருச்சடங்கை திருத்தந்தையின் வழிபாட்டுக் கொண்டாட்டங்களுக்கான அலுவலகம் மேற்பார்வையிடும். அதனைத் தொடர்ந்து, புனித பேதுருவின் பெருங்கோவில் பராமரிப்பு தொழில்நுட்ப வல்லுநர்கள் அதன் உள்ளே ஒரு செங்கல் சுவரைக் கட்டுவார்கள்.

இந்தத் தனிப்பட்ட திருச்சடங்கின்போது, ஒரு பாரம்பரிய உலோகச் சிறுபெட்டி அல்லது குப்பிகள் சுவருக்குள் வைக்கப்படும். அதில் புனிதக் கதவு மூடப்படுவது குறித்த அதிகாரப்பூர்வ பதிவு, யூபிலி ஆண்டில் அச்சிடப்பட்ட நாணயங்கள் மற்றும் புனிதக் கதவின் சாவிகள் ஆகியவை இருக்கும்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# யூபிலி ஆண்டில் உரோமைக்கு 3 கோடிக்கும் மேற்பட்ட திருப்பயணிகள் வருகை!

ஜனவரி 6, செவ்வாய்க்கிழமை சிறப்பிக்கப்பட்ட திருக்காட்சிப் பெருவிழாவன்று, புனித பேதுரு பெருங்கோவிலின் புனிதக் கதவை முறைப்படி மூடியவேளை, இந்தப் புள்ளிவிவரங்கள் பகிரப்பட்டுள்ளன.

யூபிலி ஆண்டில் உலகம் முழுவதும் 185 நாடுகளிலிருந்து ஏறத்தாழ 3 கோடியே 35 லட்சம் திருப்பயணிகள் உரோமை நகருக்கு வருகை புரிந்துள்ளனர் என்றும், இது தொடக்கத்தில் கணிக்கப்பட்ட 3 கோடியே 10 இலட்சம் என்ற எண்ணிக்கையை விட அதிகம் என்றும் கூறியுள்ளார் பேராயர் ரீனோ பிசிகெல்லா ஜனவரி 5, திங்களன்று வத்திக்கான் செய்திக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் இவ்வாறு கூறியுள்ளார்.

யூபிலி என்பது வெறும் எண்களால் அளவிடப்பட வேண்டிய ஒன்றல்ல, அது ஆன்மிக அனுபவங்களால் அளவிடப்பட வேண்டியது என்பதை வலியுறுத்திய பேராயர், மக்கள் வெறும் சுற்றுலாப் பயணிகளாக வராமல், உண்மையான திருப்பயணிகளாக யூபிலி ஆண்டில் பங்கேற்றதை உறுதிப்படுத்தும் சில முக்கிய ஆன்மிக மாற்றங்களைச் சுட்டிக்காட்டினார்.

யூபிலி ஆண்டில் உரோமைக்கு வந்தத் திருப்பயணிகளில் 62 விழுக்காட்டினர் ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள் என்றும், இதில் இத்தாலி முதலிடத்தைப் பிடித்தது என்றும் அதனைத் தொடர்ந்து அமெரிக்கா, ஸ்பெயின், பிரேசில் மற்றும் போலந்து நாடுகள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்தன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், திரு அவை மற்றும் அரசு அதிகாரிகளுக்கு இடையே நிலவிய நெருக்கமான ஒத்துழைப்பின் காரணமாக இந்த யூபிலி ஆண்டு விழா சிறப்பாக நடைபெற்றது என்றும், 7,000-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் மற்றும் முதலுதவிப் பணியாளர்களின் சேவையால் இது சாத்தியமானது என்றும் கூறப்பட்டுள்ளது.

ஜான்சி ராணி அருளாந்து - வத்திக்கான்

# நைஜீரியாவில் புத்தாண்டு தினத்தன்று 42 பேர் படுகொலை

**நைஜீரியாவில் தொடரும் தாக்குதல்கள் அப்பாவி பொதுமக்களுக்கு பெரும் சேதத்தை விளைவித்து வருவதால், இப்பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்ற அவசரத் தேவையை இந்த அண்மைய வன்முறை நிகழ்வுகள் அடிக்கோடிட்டுக் காட்டியிருக்கின்றன.**

நைஜீரியாவில் புத்தாண்டு தினத்தன்று இடம்பெற்ற வன்முறை செயல்கள் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளன. ஏனெனில் கொடூரமான ஆயுதமேந்திய கொள்ளையர்கள் நாட்டின் மத்தியப் பகுதி முழுவதும் தொடர்ச்சியான கொடிய தாக்குதல்களைத் நடத்தினர் என்றும், இதன் தொடச்சியாக கசுவான் டாஜி என்ற கிராமத்தில் நடத்தப்பட்ட தாக்குதல் ஒரு மாபெரும் படுகொலையில் முடிந்தது என்றும் ICN செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஜனவரி 3, சனிக்கிழமையன்று, தாக்குதல் நடத்தியவர்கள் கிராமத்தைச் சூறையாடி, அம்மக்களின் கைகளைப் பின்னால் கட்டிச் சுட்டுக் கொன்றதில் ஏறத்தாழ 42 பேர் கொடூரமாகக் கொல்லப்பட்டனர் என்றும், இறந்தவர்களில் கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்கள் ஆகிய இருபிரிவினரும் அடங்குவர் என்றும் கூறும் அச்செய்தி, எண்ணிலடங்கா பெண்கள் மற்றும் குழந்தைகளும் கடத்தப்பட்டுள்ளனர் என்று குறிப்பிட்டுள்ளது.

கொள்ளையர்கள் சந்தையையும், அதை சுற்றியுள்ள வீடுகளையும் தீ வைத்து கொளுத்தியதுடன், கிராமத்தைச் சூறையாடிச் சென்றுள்ளனர். தீயிலிருந்து எழுந்த புகையை ஒன்பது மைல்களுக்கு அப்பால் இருந்தும் பார்க்க முடிந்தது என்று அப்பகுதி மக்கள் கூறினர். இப்பகுதியில் நிகழ்ந்துள்ள பல்வேறு தாக்குதல்களில், இதுவே மிகப்பெறும் வன்முறைகள் நிகழ்ந்த ஒரு பகுதியாகும். இப்பகுதியில் மட்டும் கடந்த டிசம்பர் 28, முதல் ஜனவரி 3, வரை மொத்தம் 50 நபர்கள் பல்வேறு வன்முறை செயல்களால் இறந்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத் தாக்குதல் குறித்து கோன்டகோராவின் ஆயர், புலஸ் தௌவா யோஹான்னா அவர்கள், இந்த வன்முறையை "மனித உயிர் மற்றும்; மனித மாண்பின் மீது நிகழ்த்தப்பட்டுள்ள கொடூரமான உரிமை மீறல்" என்று கண்டித்துள்ளார்.

மேலும் நைஜிரிய மாநிலத்தின் வடக்குப் பகுதிகள் மற்றும் தெற்கு கெப்பி மாநிலத்தில் கொள்ளையர்கள் தண்டிக்கப்படாமல் தொடர்ந்து பயங்கரவாதத்தை ஏற்படுத்தி வருகின்றனர் என்றும், பாதுகாப்புப் படையினரால் கூட தடுக்கமுடியாத அளவிற்கு, கொள்ளையர்கள் சுதந்திரமாகச் சுற்றித் திரிகிறார்கள் என்றும் ஆயர் யோஹான்னா கூறியுள்ளார்.

கொள்ளையர்களை எதிர்கொள்ள உடனடியாக அரசு தலையிட்டு வலிமையான ஆயுதம் ஏந்திய ஒரு இராணுவப் பணிக்குழுவை உருவாக்க வேண்டும் என்று ஆயர் அழைப்பு விடுத்துள்ளார். இத்தகைய நடவடிக்கை எடுக்காவிட்டால், "தொடர்ச்சியான உயிரிழப்புகளும் பரவலான இடப்பெயர்வுகளும் ஏற்படும்" என்றும் அவர் எச்சரித்துள்ளார்

ஜனவரி 1, வியாழக்கிழமையன்று, இடம்பெற்ற ஒரு தனிப்பட்ட சம்பவத்தில், இக்கொள்ளையர்கள் சோக்கோம்போராவில் உள்ள ஒரு கத்தோலிக்க தேவாலயத்தை இலக்கு வைத்து, மதப் பொருட்களைச் சேதப்படுத்தி, கைபேசிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் உட்பட விலைமதிப்பில்லா பொருட்களைத் திருடிச் சென்றுள்ளனர். அவர்கள் கால்நடைகளையும் கொன்று, உள்ளூர் குடியிருப்புகளைக் கைப்பற்றி, அங்கு வசிப்பவர்களை வேறு இடங்களுக்கும் விரட்டியடித்துள்ளனர்.

தொடரும் தாக்குதல்கள் அப்பாவி பொதுமக்களுக்கு பெரும் சேதத்தை விளைவித்து வருவதால், இப்பகுதியில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்ற அவசரத் தேவையை இந்த அண்மைய வன்முறை நிகழ்வுகள் அடிக்கோடிட்டுக் காட்டியிருக்கின்றன.

செபாஸ்தியான் வனத்தையன் – வத்திக்கான்

# விழித்திடு நண்பா — Awake, Rise, Respond!

## 2025 தமிழ் இளைஞர் மாநாடு!







ஜொகூர் பாரு — "விழித்திடு நண்பா — Awake, Rise, Respond!" என்ற தலைப்பின் கீழ், 2025 தமிழ் இளைஞர் மாநாடு நவம்பர் 8 & 9 திகதிகளில் மஜோடி மையத்தில் சிறப்பாக நடைபெற்றது. மறைமாவட்டத்தின் பல பகுதிகளிலிருந்து வந்த இளைஞர்கள், தங்கள் விசுவாசத்தை ஆழப்படுத்தும் ஆன்மீக நிறைந்த வார இறுதியை அனுபவித்தனர்.

இந்த மாநாட்டின் சிறப்பு விருந்தினராக திரு Soosai Selvanathan அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றினார். இளைஞர்களின் வாழ்க்கைமுறை மற்றும் கிறிஸ்துவில் அடிப்படையாக்கப்பட்ட விசுவாச வாழ்க்கை குறித்து அவரது உரை மையமாக அமைந்தது. இன்றைய உலகச் சூழலில், இளைஞர்கள் தங்கள் அன்றாட வாழ்க்கைத் தேர்வுகளிலும், மதிப்புகளிலும், முடிவுகளிலும் கிறிஸ்துவை மையமாகக் கொண்டு வாழ வேண்டும் என்பதை அவர் தெளிவாகவும் ஊக்கமளிக்கும் விதமாகவும் எடுத்துரைத்தார்

Rev. Fr. Ryan வழங்கிய செய்தி மாநாட்டின் முக்கிய ஊக்கமாக அமைந்தது. "கடவுளின் அழைப்பு இன்றே, இப்போதே உணர வேண்டும்" என்ற அவரது நினைவூட்டல், பல இளைஞர்களைத் தங்கள் வாழ்க்கைப் பயணத்தை நேர்மையாகப் பரிசீலிக்கத் தூண்டியது.

இந்த மாநாட்டில் நடைபெற்ற தொடக்க விழா, இளைஞர் பணிக்குழுவின் புதிய அத்தியாயத்தை குறித்தது. Sr. Shanti மற்றும் Rev. Fr. Alex ஆகியோர் தங்களின் ஜெபம் வழி இளைஞர்களை உற்சாகப்படுத்தினர், "விசுவாசப் பாதை அனைவரும் ஒன்றாய் நடக்கும் பயணம்" என்பதை வலியுறுத்தினர்.

புகழ்ப்பாடல்கள் ஆராதனைகள், குழுப் பகிர்வு, படைப்பாற்றல்கள், தியானம் போன்ற பல்வேறு அம்சங்களின் மூலம், இளைஞர்கள் சமூகமாக ஒன்றிணைந்து, விசுவாசத்தின் புதிய நெருப்பை ஏற்றிக் கொண்டனர்.

பலரின் மனதில் இந்த மாநாடு ஒரு வார இறுதி நிகழ்ச்சியைத் தாண்டி — ஒரு அழைப்பாக மாறியது.

"ஆகவே, மற்றவர்களைப்போல் நாமும் உறங்கலாகாது; விழிப்போடும் அறிவுத் தெளிவோடும் இருப்போம்"

— 1 தெசலோனிக்கர் 5:6

## அர்ப்பணச் சடங்குடன் மீண்டும் திறக்கப்பட்ட பாரிட் புந்தார் ஆரோக்கிய அன்னை ஆலயம்



பாரிட் புந்தார், பேராக்: பாரிட் புந்தார், ஆரோக்கிய அன்னை ஆலயத்தின் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்ததைத் தொடர்ந்து, ஜனவரி 1-ஆம் தேதி ஆலய அர்ப்பணச் சடங்கு (Solemn Rite of Consecration) மற்றும் நன்றி திருப்பலியுடன் ஆலயம் மீண்டும் திறக்கப்பட்டது. இது ஆலய வரலாற்றில் ஒரு முக்கிய மைல்கல்லாகும். இவ்விழாவைப் பினாங்கு மறைமாவட்ட ஆயர், மேன்மைமிகு கர்தினால் செபாஸ்டியன் பிரான்சிஸ் அவர்கள் தலைமையேற்று நடத்தினார்.

மிகப் பிரம்மாண்டமாக நடைபெற்ற இவ்விழாவில் 2,000-க்கும் மேற்பட்ட இறைமக்கள், 30-க்கும் மேற்பட்ட குருக்கள், திருத்தொண்டர்கள், அருள்சகோதரிகள் மற்றும் சிறப்பு விருந்தினர்கள் கலந்து கொண்டனர். பாரிட் புந்தார் சமூகத்தில் இந்த ஆலயத்திற்கு இருக்கும் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில், நன்றியுணர்வும் நெகிழ்ச்சியும் நிறைந்த சூழல் அங்கு நிலவியது.

மாலை 5.30 மணிக்கு ரிப்பன் வெட்டுதல், நினைவுப் பலகை திறப்பு மற்றும் கதவைத் தட்டும் சடங்கு ஆகியவற்றுடன் திறப்பு விழா தொடங்கியது. அதன்பின் கர்தினால் செபாஸ்டியன் மக்களை ஆலயத்திற்குள் முறைப்படி அழைத்துச் சென்றார்.

நன்றித் திருப்பலியின் போது, ஆலய அர்ப்பணச் சடங்குகள் முழுமையாக நிறைவேற்றப்பட்டன. கர்தினால் புனித நீர் தெளித்து, பீடம், தூண்கள் மற்றும் நற்கருணைப் பேழையை (tabernacle) புனிதத் தைலத்தால் (sacred chrism) பூசி, பீடத்திற்குத் தூபம் காட்டினார். மேலும், கொல்கத்தாவின் புனித அன்னை தெரசா மற்றும் புனித தேவசகாயம் பிள்ளை ஆகியோரின் திருப்பண்டங்கள் (relics) பீடத்தின் அடியில் வைக்கப்பட்டன. இவை கிறிஸ்தவ சாட்சியத்தின் அன்பு, துணிச்சல் மற்றும் விசுவாசத்தின் அடையாளங்களாகும்.

கர்தினால் தனது மறையுரையில், வெளிப்புற அழகை விட அக அழகே முக்கியம் என்று கூறினார். கட்டிடக்கலை நம்மை ஈர்த்தாலும், உண்மையான அழகு என்பது வலுவான ஆன்மீக அஸ்திவாரத்திலிருந்தே வருகிறது என்று நினைவூட்டினார். விவிலியம் மற்றும் தமிழ்ப் பழமொழியை மேற்கோள் காட்டி, தூய ஆவியார் நம் வாழ்வை வடிவமைக்க நாம் அனுமதிக்க வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார். மேலும், "அதிகாரத்தை அல்ல, அமைதியைத் தேர்ந்தெடுங்கள்" என்ற திருத்தந்தை லியோவின் வார்த்தைகளைச் சுட்டிக்காட்டி, ஒவ்வொரு தனிமனிதரிடமும் குடும்பத்திலுமிருந்தே அமைதி தொடங்குகிறது என்று கூறி, அமைதிக்காக ஜெபிக்க அழைப்பு விடுத்தார்.

பங்குத்தந்தை அருட்பணி மார்ட்டின் அர்லாண்டோ பேசுகையில், "இது வெறும் கட்டிடப் பணி நிறைவு மட்டுமல்ல; இது வழிபாடு, குணமடைதல் மற்றும் விசுவாச வளர்ச்சிக்கான ஒரு புனித இடத்தை அர்ப்பணிப்பதாகும்" என்று கூறினார். 2023-ல் பொறுப்பேற்றபோது அடிக்கடி ஏற்படும் வெள்ளம், கட்டிடக் கோளாறுகள் மற்றும் நிதிப் பற்றாக்குறை போன்ற பல சவால்களை எதிர்கொண்டதாகவும், விசுவாசம் மற்றும் அனைவரின் ஒத்துழைப்பால் இத்திட்டம் வெற்றியடைந்ததாகவும் அவர் பகிர்ந்தார்.

சிறுமிகள் அன்னை மரியாவின் பல்வேறு காட்சிகளைச் சித்தரிக்கும் கலை நிகழ்ச்சியுடன் விழா நிறைவுற்றது. மேலும், 2050-ஆம் ஆண்டில் திறக்கப்படவுள்ள, ஆலய ஆவணங்கள் மற்றும் செய்திகள் அடங்கிய 'காலப் பேழை' (time capsule) ஒன்றும் வைக்கப்பட்டது. இறுதியில் அனைவருக்கும் மகிழ்ச்சியான விருந்து வழங்கப்பட்டது. இது பங்கின் வரலாற்றில் ஒரு மறக்க முடியாத நிகழ்வாக அமைந்தது.



## பொதுக்காலம் ஆண்டின் 2 ஆம் ஞாயிறு

### "இதோ, கடவுளின் செம்மறி"

எசாயா 49: 3, 5-6 திருப்பாடல்: 40: 2,4, 7-10
1 கொரிந்தியர் 1:1-3 யோவான் 1: 29-34

புதிய ஆண்டைத் தொடங்கியிருக்கும் உங்கள் ஒவ்வொருவருக்கும் இரக்கம் நிறைந்த எல்லாம் வல்ல இறைவனின் அமைதியும் ஆசீரும் உரித்தாகுக.

இன்றைய வாசகங்கள் அனைத்தும் இயேசுவை ஊழியனாக, ஆட்டுக்குட்டியாக, பாவம் போக்கும் பலிப்பொருளாகச் சுட்டிக்காட்டுகின்றன.

முதல் வாசகத்தில் எசாயா இவ்வாறு கூறுகிறார். "உலகம் முழுவதும் மீட்பை அடைவதற்கு பிற இனத்தாருக்கு ஒளியாகவும் ஏற்படுத்துவேன்". எசாயா இறைவாக்கினரின் நூலில் இயேசுவின் பிறப்பிலிருந்து அவர் இறப்பினால் மாட்சியுறும் வரை அனைத்தும் முன்னறிவிக்கப்பட்டிருப்பது நாம் அறிந்ததே.

இன்றைய திருப்பாடலில் இயேசு தாம் எதற்காக வந்தாரோ, தந்தையின் திருவுளத்தை நிறைவேற வந்ததைக் குறிப்பிடுமாறு "உமது திருவுளம் நிறைவேற்ற ஆண்டவரே, இதோ வருகின்றேன்" என்று பாடுவதைத் தியானிக்கிறோம்.

புனித பவுலடியாரும் இயேசு நமக்கு மட்டும் ஆண்டவர் அல்ல. மாறாக அனைவருக்கும் ஆண்டவர் அவர் என்று புறவினத்தார் அனைவருக்கும் இயேசுவை சான்றாக்கி காட்டுகின்றார்.

இவை அனைத்திற்கும் மகுடம் சூட்டுவதுபோல இயேசுவின் அன்புக்குரிய சீடரான யோவான் தம்முடைய நற்செய்தியில், "இதோ, கடவுளின் செம்மறி" என்று திருமுழுக்கு யோவான் மக்களிடம் சான்று பகர்வதை நாம் வாசிக்கிறோம்.

இன்று நாம் சிந்திக்கவேண்டியது: இயேசுவே நம் பாவங்களைப் போக்குவதற்காக பலியாகக் கொடுக்கப்பட்ட ஆட்டுக்குட்டி. பழைய ஏற்பாட்டு காலத்தில் மக்கள் தங்களின் பாவம் போக்கும் எரிபலியாக ஆட்டுக்குட்டியைப் பலியிட்டனர். பலியைக் கொடுத்துவிட்டால் போதும், அவர்களின் பாவம் கழுவப்பட்டு விடும் என்று அவர்கள் எண்ணினர். ஆனால் தங்கள் வாழ்க்கையையும் உள்ளத்தையும் மாற்றிக்கொள்ளவேண்டும் என்ற உணர்வு இல்லாமல் இருந்தனர்.

திருமுழுக்கு யோவான் இயேசுவை உங்களின் பாவம் போக்கும் பலியாக வந்திருப்பவர் இந்த இயேசு தான் என்று சான்றுகூறுகிறார். ஏனென்றால் ஆட்டுக்குட்டியைப் பற்றி இஸ்ரயேல் மக்கள் அறியாதது அல்ல. அவர்களுடைய வழிபாட்டில் ஒன்றானது. ஆனாலும் அன்றைய காலத்தில் அவர்கள் புரிந்துகொண்டார்களா என்றால் அது தான் இல்லை.

இன்றும் நம்முடைய பாவங்களைப் போக்கி, நம்மை தந்தை இறைவனோடு ஒப்புரவாக்கிய கடவுளின் அன்பார்ந்த மகனும் ஆட்டுக்குட்டியுமான கிறிஸ்து இயேசுவை நாம் உண்மையாகவே ஏற்றுக்கொண்டுள்ளோமா? அவரை நாம் ஒவ்வொரு திருப்பலியிலும் உண்மையான உணவாகவும், பானமாகவும் உட்கொள்ளும்போது, நாமும் பிறருக்கு இயேசுவை எடுத்துக்காட்டும் சாட்சிகளாகத்திகழ அழைக்கப்படுகிறோம். இயேசுவை நம் வாழ்விலும், வார்த்தையிலும் செயலிலும் எடுத்துக்காட்டும் திருமுழுக்கு யோவானாக இருக்க நாம் ஒவ்வொருவரும் அழைக்கப்படுகிறோம். வாருங்கள் வாழ்வோம். வாழ்ந்து காட்டுவோம்.

**பங்குச் செய்திகளை அனுப்ப அழைக்கிறோம்**

உங்கள் பங்குகளில் நடைப்பெற்ற சமீபத்திய நிகழ்வுகளைக் குறித்து செய்திகள் புகைப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. உங்கள் படைப்புகளை tamil@herald.com.my என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறீர்கள். திரு அவையின் மக்களின் வாழ்வையும் நம்பிக்கையையும் வெளிப்படுத்த உதவியமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.